## 16.7 மாவட்ட ஊராட்சி மற்றும் கிராம ஊராட்சி உபரித் தொகையிலிருந்து செய்யப்படும் பணிகளுக்கான செலவின ஒப்புதலுக்கான நிதி வரம்பினை நிர்ணயித்தல்

ஊரக வளர்ச்சித்துறை

அரசாணை (நிலை) எண் 189 நாள் : 3.9.1998

படிக்க :

1. அரசு ஆணை (நிலை) எண் 229, ஊரக வளர்ச்சித்துறை, நாள் 15.10.96.
2. அரசு ஆணை (நிலை) எண் 85, ஊரக வளர்ச்சித்துறை, நாள் 6.5.1996.
3. ஊரக வளர்ச்சி இயக்குநர், சென்னை நேர்முக கடிதம் எண் 2205/98/பிசிஏ3 நாள் 6.5.98.

**ஆணை**

பார்வை 2–ல் படிக்கப்பட்ட அரசாணையில் ஊராட்சி ஒன்றிய பொதுநிதி உபரியிலிருந்து மேற்கொள்ளப்படும் தனியான மூலதன பணிகளுக்கு ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஆட்சித்தலைவர், ஊரக வளர்ச்சி இயக்குநர் மற்றும் அரசு ஆகியோர் ஒப்புதல் அளிக்கக்கூடிய நிதி வரம்பினை கீழ்கண்டவாறு உயர்த்தி நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| 1. | ரூ. 5.00 லட்சத்திற்கு மேல் செலவாகக்கூடிய தனியான பணிகளுக்கு | ... | ஊராட்சி ஒன்றியங்கள் |
| 2. | ரூ. 5.00 லட்சத்திற்கு மேல் ரூ. 10.00 லட்சம் வரை செலவாகக்கூடிய தனியான பணிகளுக்கு | .. | மாவட்ட ஆட்சித்தலைவர் |
| 3. | ரூ. 10.00 லட்சத்திற்கு மேல் ரூ. 1 கோடி வரை செலவாகக்கூடிய தனியான பணிகளுக்கு | .. | ஊரக வளர்ச்சி இயக்குநர் |
| 4. | ரூ. 1 கோடிக்கு மேல் செலவாகக்கூடிய தனியான பணிகளுக்கு | .. | அரசு |

2. கிராம ஊராட்சி மற்றும் மாவட்ட ஊராட்சிகளில் உள்ள உபரி நிதியிலிருந்து செய்யும் தனியான மூலதன பணிகளுக்கு ஒப்புதல் வழங்கும் அதிகாரம் பற்றி தெளிவுப்படுத்தப்பட வேண்டும் என்றும், அதனால் பொதுமக்களின் கோரிக்கைகளில் முக்கியமான தனியான பணிகளை எடுத்துச் செய்வதற்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழிவகை ஏற்படுத்த ஊரக வளர்ச்சி இயக்குநர் பரிந்துரை செய்துள்ளார்.

3. மேலே பத்தி 2 ல் கூறப்பட்டுள்ள ஊரக வளர்ச்சி இயக்குநரின் பரிந்துரைகளை ஏற்று மாவட்ட ஊராட்சி / கிராம ஊராட்சிகளில் உள்ள உபரிநிதியிலிருந்து மேற்கொள்ளப்படும் தனியான மூலதன பணிகளுக்கு கிராம ஊராட்சி / மாவட்ட ஊராட்சி / ஊராட்சி ஆய்வாளர் (மாவட்ட ஆட்சித்தலைவர்) / ஊரக வளர்ச்சி இயக்குநர் மற்றும் அரசால் ஒப்புதல் அளிக்கக்கூடிய நிதி வரம்பினையும் மற்றும் நிபந்தனைகளையும் கீழ்கண்டவாறு நிர்ணயம் செய்து அரசு ஆணையிடுகிறது.

கிராம ஊராட்சி

| | | |
|---|---|---|
| 1.ரூ. 1 லட்சம் வரை செலவாகக்கூடிய தனியான பணிகளுக்கு | .. | ஊராட்சி |
| 2. ரூ. 1 லட்சத்திற்கு மேல் செலவாகக்கூடிய தனியான பணிகளுக்கு | .. | ஊராட்சி ஆய்வாளர் (மாவட்ட ஆட்சித்தலைவர்) |

மாவட்ட ஊராட்சி

| | | |
|---|---|---|
| 1. ரூ. 10 லட்சம் வரை செலவாகக்கூடிய தனியான பணிகளுக்கு | .. | மாவட்ட ஊராட்சி |
| 2. ரூ. 10 லட்சத்திற்கு மேல் ரூ. 25 லட்சம் வரை செலவாகக்கூடிய தனியான பணிகளுக்கு | .. | ஊராட்சி ஆய்வாளர் (மாவட்ட ஆட்சித்தலைவர்) |
| 3. ரூ. 25.00 லட்சத்திற்கு மேல் முதல் ரூ. 1 கோடி வரை செலவாகக்கூடிய தனியான பணிகளுக்கு | .. | ஊரக வளர்ச்சி இயக்குநர் |
| 4. ரூ. 1 கோடிக்கு மேல் செலவாகக்கூடிய தனியான பணிகளுக்கு | .. | அரசு |

# 16. GENERAL FUND WORKS

**நிபந்தனைகள்**

1. தேர்ந்தெடுக்கப்பட்ட மூலதன தனியான பணிகளுக்கு கிராம ஊராட்சி / மாவட்ட ஊராட்சி குழு ஒப்புதல் அளிக்க வேண்டும்.

2. கிராம ஊராட்சி நிர்வாகம் / மாவட்ட ஊராட்சி (நிர்வாகம்) தங்களிடம் உள்ள உபரி நிதியினை தனியான மூலதன பணிகளுக்கு பயன்படுத்துவதற்கு முன் அன்றாட நிர்வாக பணிகள் தடைபெறாமல் நடைபெறுவதற்கு போதுமான நிதி இருப்பினை உறுதி செய்யப்பட வேண்டும்.

3. மாவட்ட ஆட்சித்தலைவர்கள் இவ்வாணையை அந்தந்த மாவட்டங்களில் உள்ள கிராம ஊராட்சிகள் / மாவட்ட ஊராட்சிகளின் கவனத்திற்கு கொண்டு வர வேண்டும் என கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

4. இந்த அரசாணையை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண் 2215/எப்.எஸ்/பி./98 நாள் 20.5.98 ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகின்றது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்